054

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறி
இறுதிப் பரீட்சை - 2007/2008
MCC 1206 - கணக்கியலும் நிதியியலும்
காலம்: இரண்டு (02) மணித்தியாலம்

திகதி: 27.01.2008 நேரம்: பி.ப. 1.30 - பி.ப. 3.30

முதலாம் வினா அடங்கலாக ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க. நிகழ்ச்சிப் படுத்தப்படாத எண் கூட்டு இயந்திரம் பாவிக்க முடியும்.

01. மாத்தறையிலுள்ள 'ரன்ஜித் ஸ்டோர்ஸ்' என்னும் வணிக நிலையத்தின் கணக்கேடுகளிலிருந்து, 31 மார்ச் 2007ம் திகதியுடன் முடிவடையும் நிதி வருடத்திற்கான பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 01.04.2006ல் இருப்பு | 900,000 | |
| காசு மீதி | 80,000 | |
| வங்கி மீதி | 180,500 | |
| கடன்படுநர் (Debtors) | 320,000 | |
| வருமதி உண்டியல் | 130,000 | |
| அறவிடமுடியாக் கடன் | 6,000 | |
| கொள்வனவு | 2,850,000 | |
| வரிகள் | 800 | |
| சட்டாலோசனைக் கட்டணம் | 6,700 | |
| உட்திரும்பல் | 13,200 | |
| கடன் வட்டி | 6,800 | |
| காப்புறுதி | 7,400 | |
| உள்முகக் காவுகை | 18,500 | |
| வெளிமுகக் காவுகை | 8,400 | |
| காகிதாதிகள் | 11,000 | |
| மின்சாரம் | 23,000 | |
| கட்டிடம் | 1,000,000 | |
| தளவாடமும், பொருத்திகளும் | 400,000 | |
| வாகனங்கள் | 700,000 | |
| தபால் செலவு | 1,800 | |
| பொறுமானத் தேய்விக்கான ஒதுக்கீடு | | |
| கட்டிடம் | | 50,000 |
| தளவாடமும் பொருத்திகளும் | | 20,000 |
| வாகனங்கள் | | 35,000 |
| மூலதனம் | | 1,500,000 |
| விற்பனைகள் | | 3,500,000 |
| தடன் கொடுநர் | | 300,000 |
| ஏனைய வருமானங்கள் | | 5,710 |
| செல்மதி உண்டியல் | | 200,000 |
| ஐயப்பாட்டுக்கடனுக்கான ஒதுக்கீடு | | 2,000 |
| வங்கிக் கடன் (வருடத்திற்கு 16%) | | 1000,000 |
| | 6,664,100 | 6,664,100 |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்படுகின்றன.

(i) 31/01/2007 ல் இருப்பு ரூபா. 400,000.00

(ii) ஏற்கனவே செலுத்தப்பட்ட செலவுகள்
சட்டாலோசனை ரூபா. 3000.00
வரிகள் ரூபா. 200.00

(iii) 31/03/2007 ல் சென்மதிச் செலவுகள்
காப்புறுதி ரூபா. 2,000.00

(iv) ஐயப்பாட்டிற்கான கடன்களுக்கான ஒதுக்கீடு கடன்படுநரில் 3% மாகவிருத்தல் வேண்டும்.

(v) எல்லா நிலையான சொத்துக்களின் பொறுமானத் தேய்வு நேர்கோடு மூலம் 5% மாகக் காணப்படல் வேண்டும்.

(vi) வணிகச் சொந்தக்காரர் ரூபா. 7,000.00 பெறுமதியான பொருட்களைச் சொந்தப் பாவனைக்காக எடுத்துள்ளார். இது புத்தகங்களில் பதியப்படவில்லை.

பின்வரும் நிதி அறிக்கைகளைத் தயாரிக்குக.

(அ) 31.03.2007ல் முடிவடையும் நிதி வருடத்திற்கான வியாபார (Trading), இலாப நட்டக் (Profit and Loss) கணக்கிடுக.

(ஆ) 31.03.2007ல் ஐந்தொகை (40 புள்ளிகள்)

02. நுகேகொடையிலுள்ள 'ரன்ஜன் ஸ்டோர்ஸ்' லிருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 01.04.2006ல் இருப்பு | ரூபா. 1,800,000.00 |
| 31.03.2007ல் இருப்பு | ரூபா. 2,200,000.00 |
| கடன் கொடுநர் (Creditors) | ரூபா. 150,000.00 |
| கடன் படுநர் (Debtors) | ரூபா. 180,000.00 |
| சென்மதி உண்டியல் | ரூபா. 70,000.00 |
| வருமதி உண்டியல் | ரூபா. 90,000.00 |
| கொள்வனவுகள் | ரூபா. 4,200,000.00 |
| மொத்தத் தொழில்படு செலவுகள் | ரூபா. 400,000.00 |
| மூலதனம் | ரூபா. 1,500,000.00 |
| தேறிய விற்பனைகள் | ரூபா. 5,200,000.00 |

மேற்கூறிய தரவுகளைக் கொண்டு பின்வரும் விகிதங்களை கணக்கிடுக.

(i) மொத்த இலாப விகிதம்
(ii) தேறிய இலாப விகிதம்
(iii) நடைமுறை விகிதம்
(iv) விரைவு விகிதம்
(v) மூலதன வருவாய் விகிதம்

(5x4 புள்ளிகள்)

03. (i) இலாப நட்டக் கணக்கினையும், வருமான, செலவுக் கணக்கினையும் விளக்குக.

(ii) நிலையான சொத்துக்களின் இரண்டு வகையான பெறுமானத் தேய்வுகளை உதாரணங்களுடன் விளக்குக.

(iii) காசுப் பாதீடு ஒன்றினைத் தயாரிப்பதன் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் அட்டவணைப்படுத்துக.

(iv) வங்கிக் கட்டளை, வங்கி மேலதிகப் பற்று ஆகியவற்றினிடையேயுள்ள வேற்றுமைகளை விளக்குக.

(v) தொழிலுரிமையாளரொருவர் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினைக் கொண்டிருப்பதன் மூலம் பெறும் அனுகூலங்களை விளக்குக.

(5x4 புள்ளிகள்)

04. (அ) 'டாசன் புரோடக்ஸ்' லிருந்து 2007 டிசெம்பர் மாதத்திற்குரிய பின்வரும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

01.12.2007ல் இருப்புக்கள்

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | ரூபா. | 470,000.00 |
| நடைமுறைவேலை | ரூபா. | 120,000.00 |
| முடிவுப்பொருள் | ரூபா. | 90,000.00 |
| தொழிற்சாலை சம்பளம் | ரூபா. | 80,000.00 |
| கொள்வனவு திருப்பம் | ரூபா. | 6,000.00 |
| உள்முகக்காவுகை | ரூபா. | 12,000.00 |
| நேர் சம்பளம் | ரூபா. | 76,000.00 |
| மூலப்பொருள் கொள்வனவு | ரூபா. | 320,000.00 |
| நேர் செலவுகள் | ரூபா. | 110,000.00 |
| எரிபொருள் | ரூபா. | 70,000.00 |
| தொழிற்சாலை வாடகை | ரூபா. | 14,000.00 |
| மின்சாரம் | ரூபா. | 11,000.00 |
| இயந்திரம் தேய்மானம் | ரூபா. | 6,300.00 |
| ஆயுதத் தேய்மானம் | ரூபா. | 5,100.00 |

31.12.2007ல் இருப்பு

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | ரூபா. | 73,000.00 |
| நடைமுறைவேலை | ரூபா. | 61,000.00 |
| முடிவுப்பொருள் | ரூபா. | 95,000.00 |

மேற்கூறிய விபரங்களை அடிப்படையாகக் கொண்டு 31.12.2007ல் முடிவடையும் காலத்திற்குரிய உற்பத்திக் கணக்கினைத் (Manufacturing Account) தயாரிக்க.

(15 புள்ளிகள்)

(ஆ) பின்வருபனவற்றிக் கிடையேயுள்ள வேற்றுமைகளை விளக்குக.
(i) நுகர் பொருட்களுக்கான செலவு (Cost of Consumed), மூலச் செலவு (Primary Cost)
(ii) தொழிற்சாலைச் செலவு (Factory Cost), உற்பத்திச் செலவு (Cost of Production) .

(05 புள்ளிகள்)

05. (அ) அடிப்படைக் கணக்கியல் அறிவு தொழிலுரிமையாளரொருவருக்கு ஏன் அவசியமாகின்றது?

(ஆ) வணிகமொன்றினை விருத்தி செய்யும் போது கவனத்திலெடுக்க வேண்டிய காரணிகள் யாது?

(இ) தொழிலுரிமையாளரொருவருக்கு மூலதனப் பரவலாக்குதல் முக்கியமானதென்பதனை விளக்குக.

(ஈ) பணமுகாமையினை (Cash Management) இழிவாக நடைமுறைப்படுத்துவதால் தொழிலுரிமையாளர்கள் முகம் கொடுக்கும் ஐந்து (5) பிரச்சினைகளை அட்டவணைப்படுத்துக.

(உ) நுண்பாக நிதியிடலின் (Micro Financing) கருத்தினை விளக்குக.

(5x4 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)